4143

உ

சிவமயம்.

ஓம் ஞானசந்திராய நம:

# ஸ்ரீ கதிர்காமநாதர் காவடிச்சிந்தும்,

மதுரை, பிட்டுத்தோப்பு

# ஸ்ரீசித்திவிநாயகர்பதிகமும்



மதுரை வடக்குமாசிவீதி,

மனோன்மணி விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1927.

THE MADURA TAMIL SANGAM

4143

நூல் அன்பளிப்பு
தமிழக வேளாண்மைத் துறை
அமைச்சர் மாண்புமிகு
கா. காளிமுத்து, எம்.ஏ.,

உ

சிவமயம்.

ஓம் ஞானசத்திராயநம:



ஸ்ரீ கதிர்காமநாதர்

# காவடிச்சிந்தும்,

மதுரை, பிட்டுத்தோப்பு

## ஸ்ரீ சித்திவிநாயகர் பதிகமும்.

இவை

குன்றுக்குடி பெஞ்ச் மாஜிஸ்டிரேட்டாயிருந்த
நேட்டிவ் டாக்டர்

**G. முத்துசாமிபிள்ளை அவர்கள் குமாரரும்**

தெய்வத்துதித்திரட்டு, சிங்காரமாலை திரவியமென்னும்
நூல்கட்காசிரியருமாகிய
நேட்டிவ் டாக்டர்

**M. கணபதியாபிள்ளை அவர்களால்**

இயற்றப்பெற்று

மதுரை வடக்குமாசிவீதி
மனோன்மணிவிலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.
1927.

உ

குகமயம்.

# சாற்றுக்கவிகள்.

முத்தமிழ் க்ஷேத்திர மதுரை

எம். இ. எம். பாஸ்கரதாஸ் அவர்கள் இயற்றிய

வெண்பா.

காவடிச்சிந் தொன்று கதிர்காம வேலனுக்குக்
காவடிக்கு னாற்றேனின் காக்காத்த—மாவைங்
கரக்கணப திக்குங் கவியோதி னானற்
றாக்கணப திக்கவிஞன் றான்.

---

சிவகிரி ஜமீன் இராஜகிரி


மா. அணைக்கரைமுத்துப்புலவரவர்களியற்றிய

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கணபதியா டரவணிந்தோன் மகனெனுநற் கதிர்காமக்
கந்தன் மீது
கணபதியன் றமருக்குக் கடலினமு தங்கொடுத்த
காட்சி போல
கணபதிகஞ் சந்தமிகுங் காவடிச்சிந் தின்புறக்கா
சினிக்கின் றீந்தான்
கணபதியாம் பெயர்கொள் முத்துசாமியரு ளியசுதனும்
கவிச்சிம் மேறே.

வெண்பா.

பொன்வளருங் குன்றைநகர்ப் பூமான் வயித்தியந்தேர்
மன்னுமுத்து சாமியருண் மைந்தனும்—நன்மைதரு
துங்கக் கதிர்காமக் காவடிச்சிந் தொன்றளித்தான்
தங்கக் கணபதியே தான்



உ

குகமயம்.

## ஸ்ரீ கதிர்காமநாதர்

# காவடிச்சிந்து.

வெண்பா.

### ஸ்ரீவிநாயகர் வணக்கம்.

கூற்கா னதிவளஞ்சேர் மல்லகதிர் காமருக்கே
நற்கா வடிச்சிந்தை நாணியற்ற—கற்புடைய
மானைமறித் தேனலயிற் கோனனையப் போனமதத்
தானைமுகத் தானையழைப் பாம்.

### ஸ்ரீ சரஸ்வதி வணக்கம்.

சங்கே யனவனமுந் தாழ்வடமும் யாழுமின்ன
வெங்கே நினைப்பினுமங் கென்முனிற்பாள்—பொங்குமணத்
தண்டமிழும் புண்டரிகந் தண்டமெனுந் தொண்டரிடந்
தண்டமிழுங் கொண்டருளுந் தாய்.

### ஸ்ரீ குருவணக்கம்.

பாட்டினுனை வேட்டிலையுன் பாட்டிலிகக் கோட்டியிலே
மாட்டிலெமன் மாட்டிலெரு மாட்டுகென—காட்டிற்
கவலை முறுஞானக் கண்டிறந்து காத்த
மவுன குருமணியே வாழி.

---

வண்ணத்தினைமாலை – என்ற மெட்டு

ஊர்வனத்தில் பூத்த பூவையே கிள்ளி
ஊசலாடுமொரு பூவையே வல்ல
வுக்ரவீரசக்திப் பாவையே பெற்ற
வுயர்வாகிய கதிர்காமசண்
முகநாதனை நினைவாய்நித
மோதியொருதரஞ் சேவையே செய்தாற்
குண்டோ வுலகிலோர் தேவையே.

உவமிக்கொணாக்குயிற் கூட்டமே மார
னுருவில்லாதவன்போ ராட்டமே யண்டா
தோட்டி ஞானைப் பாவி னூட்டமே கொண்டு
முடைசோவண மனைகாவுண
வடைகாயிலை யணைபூவுற
வொன்றுமெண்ணாதேமே னாட்டமே வைத்தா
லோயும் பலபல வாட்டமே (2)

கார்கண்டாடுமயிற் பந்தியே நொச்சி
கடிக்கைகூவிளஞ் செவ் வந்தியே தூவிக்
கைகுவித்தேயந்தி சந்தியே நின்று
கருணாகர தெருணாயக
வருணாரண மருகாவொரு
கத்தாவே யென்றுபோ ருந்தியே நின்றாற்
காப்பாரே வந்துதான் முந்தியே. (3

கட்கழுநீர்சோலைச் சங்கமே ஜீவ
காருண்யமாப்பிர சங்கமே செய்து
கஞ்சராசலத ரங்கமே பொங்கக்
கழையாழ்சுதி தவிறுந்துமி
கிடமாகுளி துடிகொம்பதிர்
கதிர்காமத்தானெனுஞ் சிங்கமே நிற்கக்
காட்டிலுண்டோவேறு பங்கமே. (4)

கார்த்திகையான்கொடிச் சேவலே வெம்பொய்க்
கதைகளாய்ப்பாவும் நாவலே கற்றுக்
காமவாதைப்பட்டுப் பூவிலே நாளும்
கடையாகிய மடவாரொடு
மிடியேபடு மடியேனுனைக்
காணவேணுமென்ற வாவலே கொண்டேன்
கதிரைவேலென்பர்க்கே தேவலே. (5)

கம்மல்பூண்டவள்ளை யட்சியே மேவுங்
கமலவாவி சீந்திக் கட்சியே சிந்துங்
கனிகள் பீறுமன்னப் பட்சியே வீசுங்

கதிர்பூரண மதிதாரகை
புதிதாகிட முதுமாமலர்
காட்டுங்கதிர்காம வெட்சியே பூண்ட
கந்தனைக்காணியுண் மெச்சியே. (6)

பார்வை காணநிற்கு மன்றிலே பச்சைப்
பார்பதிபிறந்த குன்றிலே தன்னோர்
பக்கக் கோடொடித்து நன்றிலே நல்ல
பழபாரத மெழுதோர்கரி
பிளையானெனு மழகாலிரு
பைங்கொடியும்புணர் மன்றிலே மிக்கோன்
பத்தர் மனம்வைப்ப தொன்றிலே. (7)

பாடுங்கணபதி நெஞ்சமே வாழும்
பதிவுள்ள கதிர்காமா தஞ்சமே யென்றும்
பக்திமிறிலோப வஞ்சமே நீக்கிப்
பரமாதீத வரமாதவ
பிரமோதிவ்ய யறிவாலறி
பாவலருக் கேது பஞ்சமே கொஞ்சம்
பகருவாய் தேங்கசி கஞ்சமே (8)

மஞ்சுநிகர்குந்தள - என்ற மெட்டு.

மஞ்சுநீரின் கஞ்சவஞ்சியே—மனதிறைஞ்சி மகிழ்ச்சி மிஞ்சி
மங்களாரத் தொங்கலிஞ்சியே பொங்கி
மன்றமாமது துன்றவிணைந
வின்றுதானெதிர் சென்றுசேவைசெய்
வங்கநாகன் தங்கு நெஞ்சியே—மதுரிதஞ்சேர் கதிர்காமத்தின்
மலையினிற்கும் நிலைபார் கொஞ்சியே
மாரிகாலச் சூரியன் போலே வனங்களெங்கு மனங்கடங்கு
மாமையைபிச் சிலைமயின்பாலே மெச்ச
மந்திவாடை குந்திமுதலர்
சிந்திமாயின றந்தநூநெடு
வக்ரதந்த விக்ரமத்தாலே—வாழைமரத்தை மாழைமரத்தில்
வைத்துவிளை யாடிடுமேலே (2)

அஞ்சுமுன்றறி விஞ்சையன்பதியே—அருள்சுரந்த பொருணிறைந்த [செய்ய
அந்தரரும் வந்து துதியே
ஆடகந்தொடை சூடரம்பைய
ராடவந்துடி கோடு துந்துபி
ஆகுளிதனில் தூரியஞ் சுதியே—குலவயாழுமுலகமேழும்
அதிருங் கோபுரந் தவழும்பால் மதியே (3)

அளவிலாத காவடிக் கூட்டம்—ஆங்காங்கு எங்கும் பாங்காய் வணங் [கும்
அக்கினிக்காவடிக் கொண்டாட்டம்—பார்க்க
அண்டமேசுமை கொண்டசேடனு
மண்டியீதென விண்டிடாவரு
ளானந்தங்கண்டால் வினையோட்டம்—ஆடாது பேயும் நாடாதுநோயும்
ஆறுமுகன் தாளில்வை நாட்டம் (4)

தஞ்சமென்பார்க் கஞ்சலாய் வருவான்--சாயுச்யமுத்தி ஆயுட்டிருப்தி
சந்ததியுஞ் சந்ததந் தருவான்—மேலும்
சத்வபூசனை வித்வவாசனை
தத்வயோசனை சித்துபாசனை
சகலசௌபாக் யாதியுந் தருவான்—பரவலீவான் குரவனுவான்
சத்திபுத்ர னசத்யருட் சருவான் (5)

சருவலோகமு முருவமானவனே—சச்சிதானந்த அச்சிவானந்த
சம்புகும்பிடுந் தகைமை வாய்ந்தவனே—என்று
தண்ணுறுமகிழ் நண்ணியேபுகழ்
பண்ணியோதிடிய மண்ணமேலெயெனும்
சாதுக்கள்வரும் பாதையிலிருப்பான்—தாளமெகொள்தாளன் ஏழைபங் [காளன்
தனையுமுன் செய்த பிழையெல்லாம் பொறுப்பான்

பந்துபோ னிமிர்ந்து சோடியே—படவடப்பூ ணிடுநடப்பூம்
பாரதனக்காரச் சேடியே—பாசப்
பள்ளமேவிழு கள்ளமேகெட
உள்ளமீதருள் வெள்ளமேவர
பத்திசுத்தியாய் நித்தம் நாடியே—பணிந்துவெண்ணீ றணிந்துகண்ணீர்
பாயவா னந்திப்போங் கூடியே

பஞ்சைமோது செஞ்சரண் சந்து—பகடுநொந்து உடலுளைந்து
பவளவாய்வெளுத் திருகண்ணுஞ்சிவந்து—சந்தம்
பந்தமேபடு சந்தபாயல
ணைந்துவாவென விந்துசாய்மத
பங்கமாறப் பகருவாய்வந்து—பணிவுடனே கணபதியே
பாடியதோர் காவடிச்சிந்து (8)

---

புள்ளிக்கலாபமயிற்பாகன் - என்றமெட்டு.

கள்ளுண்போதையாற்பூ மேலே துயில்
கரும்புள் கனியெனக்கை யாலே பெண்கள்
கைக்குடலை யிட்டுப்பின்பார்த்
துக்குதல் கண்டாடுமந்தி
கோலே சுற்றி வாலே (1)

கன்னல் தென்னையிஞ்சி வாழை மஞ்சள்
கமுகுமஞ்ஞாஞ்சிதந் தாழை சூடும்
கச்சிதவே லிச்செய்க்குரல்
மச்சிலேசாய்ந் தெற்றுஞ்சற்று
மேழை யென்னு தாழை (2)

தெள்ளமுதம் போந்த வாவி யெங்கும்
சீரலை மோதிமுத்தந் தூவி தத்த
சிந்து செந்தாமரை மின்னார்
முங்கமுகந் தோற்ற தென்றீ
ஏவி துள்ளுந் தாவி (3)

திங்களாடவிமே லொட்டி மாசு
தேய்த்து முறக்குரங்குக் குட்டி கையாற்
சிக்கெனப் பிடிக்கப் பாய்ந்து
பொற்றருக் கொப்பாலெட்டாதால்
கிட்டி நீட்டும் எட்டி (4)

வெள்ளமாக வருந் தேனை பாய்ச்சு
வேளன்ன மள்ளரின்மேல் வானை மோதி
மின்னலைப் போலுன்னி வேலி
தன்னையுமூ தின்னமீனின்
சேனை யிடுமம் மானை (5)

மெல்லவே குயில்கள் பாடும் மயில்
விசித்ர சிறகைவிரித் தாடும் சங்கு
விரிடப் பலாப் பழத்தைக்
கேர்டரமத்தளங் கொட்ட
கூடும் அன்னப் பேடும் (6)

குள்ளை யானமுனி வோரை யொக்கும்
குபேரமகரிஷிக ளுனை மெச்சிக்
கோபுரவாயலில் நின்று
காபுரவலா வென்பர்பூந்
தாரை பிள்ளை யாரை (7)

குன்றை மாநகரொன் றுளும் வாழும்
குழந்தை கணபதியை யாளும் கந்தன்
கூறுங்கதிர் காமங் கொழும்
பூர்வளமுரைத்தா லன்பீர்
சேளும் இன்னும் நீளும் (8)

---

## கண்ணாயிரம்படைத்த - என்றமெட்டு முடுகு வேறு.
## தலைவியின்சிறப்பைப் பாங்கி கூறல்.

பனிமலர்மொக்கிய நனிமது மொக்குளைப் பாவியே அலை
பணிலவளைத்திரள் மணிகள் கொழித்தலை கூவியே செல்லும்
பரிவுற்றிரணிய படிபெற்றழகுறு
பரிவித்தியிலுறை தருமத்தியினையா மேவியே-உன்னைப்
பார்க்கமனதிலேக்கமா ேடவியே

பகலைமழுக்கிய நகையைவழுக்கிய தனத்தினுள் ஞானம்
பகருமுனம்போ ருகபதம் நம்போர் மனத்தினுள் கஞ்சன்
படியிடைமங்கையர் வடிவழகங்குலி
பிடிபடுமங்ஙனிமடவி புரிந்தமெதன கனத்தினுள் வண்டு
பாடவனத்தின மாடதிபுட்பவ னத்தினுள்

தனிபெறுபற்பலமுனிவருவப்பயி னேக்கத்தாள் முத்தித்
தவசுமகத்துவ பவுசுமிகத்தெளி யூக்கத்தாள் ஓரைஞ்
சரசித்தசனைச் சரசித்தனைகச்
சுரகற்றனபொற் பிரதிச்சுரமா தாக்கத்தாள் நின்பொன்
தண்டாமரையடி யண்டாரணமுடித் தூக்கத்தாள்

சசியொடுபத்தும சசியைநகைத்திடு முகத்தினள் தெய்வத்
தளமணியம்மணிகளமணிசெம்மணி நகத்தினள் முத்துத்
தளமிடுபரிமள மெழுதடவணைமிசை
குளமிடுமடவன வளநடையொடுகிரி சுகத்தினள் மந்த்ரத்
தடையரிசர்ப்பப் படமதையொக்கும் பகத்தினள்

கனிமதுசர்க்கரை கனல்பயமுக்கிய வாக்கினள் காவைக்
கருதியளிக்கினு முறுதியொளிக்கா நாக்கினள் நித்தம்
கத்தும்புரிவகை சுத்துங்கயகறை
மெத்துங்கனகநி றச்செங்குமிழ்மலர் மூக்கினள் உந்தன்
காதல்கொடப்பளமோதகமப்பமு மாக்கினள்

களிதருமைக்கிடையொளிர் மின்னலைப்பழி யிடையினள் தங்கக்
கதலியயத்தொடு முதலிலுயர்த்திடுந் துடையினள் வேதங்
கற்குமுற்கருணை நிற்குநற்கவனர்
சொற்குவிற்கொளரி எற்கள்புற்கிணைசெய் புடையினள் மிக்கக்
கடிமலர்மன்னிய தொடையதுபின்னிய சடையினள்

புனிதவரத்தினை மனிதர்பெறத்திகழ் பாதனே சுற்றும்
புலனையொடுக்கின நிலையில்வருங்குரு நாதனே முத்துப்
புனமெத்தத்தன கனதத்தைக்கினை
வினவத்தக்குற மகள்கட்கொப்பிய நீதனே இந்தப்
பொழுதிடுநேத்தவ டொழுதிடுமுத்தம் போதனே.

புவிபுகழ்பெற்றிடு கணபதிநித்தமும் பாடியே வாழப்
புனைதருசுப்பிர மணியவெனத்தினந் தேடியே நம்பிப்
புலவர்க்கினிதுறு பலசித்திரகவி
யுலகிற்புகலழு மலசிக்கறவினி ஓடியே வந்தாள்
பொறைநெஞ்சினனே சரணஞ் செய்தேன்கோடியே

---

**ஆறுமுகவடிவேலவனே-என்றமெட்டு தோத்திரம்**

வாலைமீனாம்பிகை பாலகனேவும்பர்
வாழ்த்துங் குரு நாதா இந்த
வையகத்தேபோற்றும் பையனைக்காப்பாற்றும்
மார்க்கந் தெரி யாதா (1)

வாழைபூகமிக்கு தாழைமுவிருட்சம்
மாதங்கும் பூந் தோட்டம் எங்கும்
வைத்திலங்குங்கதிர் காமக்குபரேசா
வந்தருள்வாய் ஸ்ரேட்டம் (2)

காலன்வருமுன்னே காறள்ளாடுமுன்னே
காப்பது மூன் பாரம் தேவா
கைதொழுதேன்பல வைதிருந்தாலுங்
கனிந்தருள்பா தாரம் (3)

நற்குகை வாழாக்க சற்குண நாதாக்கள்
காணக் கிடைத் தோனே என்னைக்
கைதவறவிடாதைவரை யாட்கொளுங்
கார்த்திகைச் சீமானே. (4)

ஆலைக்கரும்புபோல் மேலைப்பிழிந்திடு
மல்குலியா ராலே பட்ட
தத்தனையும்போதுஞ் சத்திவேல்முருகா
ஆடிவா முன் னாலே (5)

அன்றுமுதலின்று மென்றுமொன்றாய்நிற்கு
மாதிபரஞ் சோதி என்னை
ஆளாக்கிக்கொள்ளாது பாழாய்த்திரியவிட்
டாட்டு வதோ நீதி (6)

மாலைகாலிவிட்டுக் காலைமாலையிலும்
வாழ்த்திடு மோ ராட்சி தந்து
மையலறவுந்தன் கையாலணைத்துன்
மகிழ்ந்தருள்வாய் காட்சி (7)

மல்லகுன்றுக்குடி யில்வாழ்கணபதி
வாழ்த்துங் கிரு பாகரனே திரு
மால்மருகா வடிவேல்முருகாபரரும்
வாசாம கோசரனே (8)

---

## தெய்வவுண்மையைப் பாங்கி தலைவியிடம் கூறல்.

பூமிமேச்சிடும்-என்ற மெட்டு.

நங்கை நாக மிந்தோ டெங்குமோது சண்டன்
சென்னியே விழவுன்னியே வுதை வன்னியே யெரி
நையுனீந்த முருகையன் காணீயடி கன்னியே (1)

கண்டபேர் மனத்தை யுண்டு பூரித்திடுந்
தனத்தியே நல்லமனத்தியே தினைப் புனத்தியே சேருங்
கந்தக்கடம்பனையே வந்தித்திடுவோம்வாரா யினத்தியே. (2)

கங்கணங்கதிரே பொங்கு மங்கைச் சங்கக்
கழுத்தியே தோத்ரம் வழுத்தியே சாக்ரசுழுத்தியே சொக்கும்
காட்சி நாயகன்றாட் காட்சியாவோஞ்சாவைக் கொழுத்தியே (3)

கஞ்சராமருதங்க மிஞ்சவே வருதெங்குங்
கதறவே சேடன் பதறவே வான்பூ வுதறவே வருங்
கானக் கதிர்காமவே டானே யாள்வார்வினை சிதறவே (4)

பிங்கலாபரணத் தொங்கலாட வாடை
பிறங்கவே அன்ப ரிரங்கவே இன்பத் துறங்கவே தோற்று
பேரின்பா றுமுக னேரிங்கேது தெய்வங் கறங்கவே (5)

பெண்கணுகமின்க டன்கனை வினை
பிற்றிலே மீட்டிவெற்றிலே யிட்டுச் சிற்றிலே விட்டு
பேரிராகம்பாடுஞ் சீரையோத வென்றுற் சற்றிலே (6)

பங்கயாதனத்தி தங்கமா வனத்தி
பத்தியே செய்யுஞ் சித்தியே நிறை முத்தியே வைகும்
பாசநாசக்கும ரேசனைம் பாரடி நத்தியே (7)

பாசுகூசுபுயத் தேசுவிசுசசி
பணபதி மெச்சுங்குணபதி அன்பன் கணபதி பாடும்
பாடலேபுனையுந் தேவலோகன்மகள் மணபதி (8)

என்னடி நான்பெற்றமங்கை-என்றமெட்டு.

மும்மதவாலிப அத்தி முகமெத்தி இளநித்தி யனே
முத்தலதேவரும் பத்தி—செய
மோனப்பொருளாய் வந்துரை
ஞானக் கதிர்காமத்துரை
மூதண்டகூடனே சத்தி—யையா
முன்னின்றரு ளட்டசித்தி (1)

சோகமெனுங்களை யுண்டு மயல்கொண்டு சொலிரண்டு வினை
மூடியே வாடிவெருண்டு—திரி
மூடத்தன மோடத்தனி
கூடித்தொணி தாடைக்குமேல்
மூளுநடனத்தைக் கண்டு—கொள்ளு
முத்திதாவன்பு திரண்டு (2)

எம்மதமு மொருமதமாய் நற்சம்மதமாய் சேர்சபதமாய் எங்கும்
இங்கங்கெனுதுறும் பதமாய் = நிற்கும்
ஏகப் பிரமாகச்சிவ
யோகப் பிரகாசத்தினு
லென்னை யறியுமா றிதமாய்—சொல்லு
மெந்தாய் வந்தடைந்தேன் சதமாய் (3)

ஏசமூவாசையாங் கூட்டு யிட்டபூட்டு பட்டோட்டு ளோடி
ஈகையில்லாரைப் பொன் கேட்டு—சுற்று
மேழைக்கிரு மாழைச்சர
தாளைத்தரு நாளைப்புக
லில்லாவிட்டா லென்னபாட்டு—வேண்டு
மின்னமுமா வினை யாட்டு (4)

வெம்மனப் பேயை யுதைத்து அன்புதைத்து பதம்வைத்து நாறு
மெய்யாசை பொய்யெனக் கைத்து— அருள்
வீசுந்தவ நேசந்தனை
யேசிந்தை கொடேசஞ்சித
வெய்யவினையைச் சிதைத்து—வாழ
வேன்முருகாவாவமைத்து. (5)

வேதமுதற் குருநாதா பிரசாதா வெகுநீதா யென்வி
சாரமெல்லாந் தெரியாதா—இன்னும்
வீரப்புலி நேரிற்பசு
சேரப்படி மாரப்பயல்
வெருட்டல் விரட்டத்தகாதா—மோட்ச
வீடளித்தல் சாரும் போதா (6)

அம்மை வராகி குமாரா சுகுமாரா இலகாரா மயி
லாடநடஞ் செய்குபோரா — அண்டர்
ஆசற்றுப வாசத்தொடு
பூசித்தருள் யாசித்திரு
ஆதிமத்யாந்த விஸ்த்தாரா — என்னை
ஆட்கொள்ளும் பரோபகாரா (7)

அன்பன் கணபதிநீடும் சுகம்கூடும் படிபாடும் பாட
லன்றாட்சம் புயஞ்சூடும் — சுட
ராளுங்கதி நாளுங்கதி
வாளங்க நிராலம்பனே
ஆரவார சூரனோடும் — படி
ஆய்ந்தவாவென் முகம்நாடும் (8)

---

## நற்றாய் மகனுக்குப் புத்திபோதித்தல்.

பாதிராத்திரிவேளை-என்றமெட்டு.

ஆனைமா முகத் தானுவாவெனும்
ஆண்டவனருள் யாப்பு பாடா
தங்கிகூந்தலிற் சீப்பு மாட்டி
அழகாய்ச் சீவியு மூப்பு காட்டா
தாடுமாதரைக் கூடினுனக்
கார்செய்வார் கொலோ காப்பு (1)

ஆலகாலவி ழிக்குமாத்திரி
யச்சமாகு சேக் கைக்கும் பத்ம
வாரனோர் வளைக் கைக்கும் தூய
வாரபந்திர கைக்கும் அவ
ளாகமீதினு மோகமாகுமுன்
னைசெயப்படிக் கைக்கும் (2)

ஊனை மாதமுஞ் சோனை போல்விடு
மூத்தை நாரிகள் சீர்கள் பெற்றோ
றுறவு சேர்த்தவ ரூர்கள் சென்று
மோடெடுக்க வைப் பார்கள் அவர்க்
குருகினையிதைத் தெரிகிலோ பெண்ணு
முனக்குயார் கொடுப் பார்கள் (3)

வாசிமல்லிகை வாசம் வீசிட
உடம்பெலாம்பிர காசம் தரு
பூயர்கதிர்காம வாசம் செய்யா
தூர்மினனூர் சாவ காசம் மிஞ்சி
யூன்றுகோல்கொடு தோன்றினேன் கண்டோ
ருரையாரா பரி காசம் (4)

மீனைநேர்விழி மானும் நீயென
மேகநோய்ப் பெண்கள் பற்றாய் அவர்
வீட்டுக்கோடித் தன் னற்றாய் தந்தை
மேற்பகைத்தொரு நெற்றாய் நொந்து
வெந்துபோனே னறிந்திலாயிந்த
வித்தையாரிடங் கற்றாய் (5)

வீதிமேற்சிகை கோதியேவரி
விழிக்கு மஞ்சனந் தீட்டி கச்சுள்
விம்முமார்பிடை காட்டி பழ
வேசைப்பாட்டியைக் கூட்டி வரு
மெல்லியர்களி னல்குற் கேணியில்
விடுத்ததார் வினை மூட்டி (6)

வானைதான்புசி தேனையேபசி
வந்தபோ துண்டு மூச்சே கெடா
வாகியேற் றருட் பேச்சே கேட்டால்
மாசிலா மணி யாச்சே இதை
மறந்து மாதர்க்குக் கறந்ததாலுந்தன்
மானவெட்கமும் போச்சே (7)

மதிக்குமோர்கண பதிக்கு நாடொறும்
மாறிடா தருள் பெய்யும் தவ
வான்கதிர் காம பூய்யும் பவ
மகிமை கண்டேனுன் மெய்யும் பாதம்
வாழ்த்தினேன் றுன்பத் தாழ்த்தொணாதேழை
மைந்தன்மேற்க்ருபை செய்யும் (8)

செந்தின்மாநகர்வாழ் - என்ற மெட்டு

இந்திரிய நிக்ரகம்செய்தல்

உக்ரவீரக் கதிர் காமக்ருபாமேரை
யுற்று நோக்கா யக்கமே வேல்வே
ளுலவுவாருன் பக்கமே இவ்வாழ்
வுணர்ந்திடாம லுக்கமே செய்யு
மூடல்மாதர் தனம் நாடி வாடினதை
யுரைக்கப் போனால் வெட்கமே (1)

உற்சவாதிகளில் சற்சனர்வர்தொழ
வூஞ்சற் சப்ர மஞ்சமே ஏறி
ஓதுமிப்ர பஞ்சமே வுய்ய
வுட்கார்வோனை நெஞ்சமே கெஞ்சி
வுந்திமீது வந்தி எந்நாளுமில்லை
யுந்தனுனை பஞ்சமே (2)

மற்கட மின்னார்கள் சொர்க்கமே பிடித்து
மார்பணைக்கும் பாணியே கெட்ட
வாடிக்கைக்கு நாணியே ஆறு
வதனத்தானைப் பேணியே போற்ற
மறந்தாலோ வெடுக்க வந்தாலும் வரும்பிட்சை
வாங்கவோட்டைப் போணியே (3)

பக்குவமடைந்த பாவையமா ரெச்சிலைப்
பருகிமுத்தமே வாயே நம்பிப்
பணிந்து துணிந்துகா வாயே கம்பன்
பாலாமானுபா வாயே என்றும்
பாடினாலுனையே நாடிடாது யென்றும்
பல்லுப்போனவோ வாயே (4)

மாலைக்காலங்களில் மேலைத்தேய்த்தலம்பி
வாசனைகள் பூசியே வரு
மாதர் வாய ருசியே ருநகர்
மானங்கெட்ட நாசியே சொர்க்கம்
வானோடிந்தப்பூமி காணுங்கொல் கதிரேசன்
வனச பாத தாசியே (5)

தண்டையாடலை விளக்குமா றணிந்து
தனித்தங்கச் சவிகளே பூண்டு
தழும்பல் குற் கெவிகளே கொண்டார்
தாளங் கேட்குஞ் செவிகளே தீய
சாவுநோவு நீங்க வாவலாய்க் கேளுங்கள்
சரவணத்தர் கவிகளே (6

பணங்கொண்டுபவர்க் கிணங்கும் பூவையர்
படுக்கைவீடு காதமே யெனினும்
பகலிரவோர் மாதமே காய்ப்புப்
படநடக்கும் பாதமே வள்ளி
பாவையே புணர்ந்தான் கோவிற்கோர் தரஞ்செல்
படைக்கும் வேதா நீதமே (7)

சணமுநீக்கமின்றிக் கணபதிக்கு ணின்றே
சாற்று மேற்று வானவன் எனந்
தன்னில் யானை யானவன் மார
தகனனும் பெம் மானவன் புகழ்
சாந்தமாஞேணிட்ட மாந்தர் கேட்டதெல்லாந்
தருந்தயாளத் தேனவன் (8)

---

சந்தவரை வந்தகுக நாதா - என்ற-மேட்டு

## வாழ்வினை வேண்டுதல்.

சித்ரகதிர் காமமுரு கோனே தவ
சின்மய மாந்தன்மய சீமானே ஞான
சேகர விதேக பெருமானே
புவிவானே செவிப்போனே உனைத்
தேடியுமே ஓடிவந்தேன் நானே (1)

சென்ம வினைக் கன்மமெல்லாம் போக்கி அட்ட
சித்திசெயுஞ் சத்துவனே ஆக்கி இந்தத்
தேசமெலாம் நேசியருள் வாக்கி
ஆக நோக்கி மாயை நீக்கி எந்தன்
சென்னி வைப்பா யுன்னலர்த்தா டுக்கி (2

மெத்தப் பிரசித்த வென் வாயகனே வசு
மேலழகி வள்ளியின் நாயகனே முத்தி

வேண்டடியார்க் கிண்டருண் ஞாபகனே
மகாமகனே வுமா மகனே தன்னேர்
வேறிலதாய்க் கூறும்வியா பகனே (3)

விரதமதாய் நரர்சுரருங் கூடி நாலு
வேதமது மோதியுங் கொண் டாடி கோவில்
வீதியினிற்க வனந்தங் கோடி
தொடைசூடி மின்னுர் சேடி கவரி
வீசிட எழுந்தருள்வாய் நாடி (4)

தத்வ விசாரத்தவசி ஞாலே தன்னைத்
தானறிந்து வானயிர்துப் பாலே உண்டு
சாற்றிரு நோயாற்றியுமென் மேலே
ப்ராணகாலே கொண்டு மேலே சேரத்
தந்தருள் வாயுந்தனிரு காலே (5)

சர்வபரி பூரணமா மையே உம்மைத்
தஞ்சமென வஞ்சலித்தே னையே இந்த்ர
ஜாலமதாம் ஜாலமதைப் பொய்யே என
மெய்யே கொண்மூன் மெய்யே மட்குட்
சார்ந்துவிடா தோர்ந் தருளைச் செய்யே (6)

பத்தர்களா டத்தையறுத் தாளும் வேலைப்
பாரபுயங் கொண்டுமத வேளும் கண்டு
பண்பொடு நமஸ்கரித்துத் தாளும் வீரா
நீளும் புனத் தாளும் பின்பு
பார்த்திசையச் சேர்த்தவா தாளும் (7)

பச்சை நிறப் பட்சிகளே ஆடும் மிக்க
பாங்கு மிகுத்தோங்கு குன்றை நாடும் சொல்லும்
பாவலன் கணபதியே பாடும்
கவிசூடும் ஞான வீடும் காட்டிப்
பார்த்தருள்வான் கார்த்திகையா நீடும் (8)

---

## தோத்திரம்.

மாவளருங்கதிர் காமா ஓடி
வாரா திருப்பது மாமா நித்தம்

வருத்தமாகவே வருத்தி மேனியுங்
கருத்தும் நோவேனைத் திருத்தவே யெதிர்
வருவதோர் மலையா உந்தன்
மனமிரங் கலையா (1)

ஓவியமாய் வளர் குருவே வும்ப
ரோதிடுங் கற்பகத் தருவே நிதம்
உரித்தொடு பார்த்துன் திருத்தளிகாத்தன்
புறத்து மேழைமுன் சிரித்தொரு வார்த்தை
வுரைக்கச் சபதமா இது
வுனக்குச் சம்மதமா (2)

கோபிகாஸ்திரிகள் கூடி வரு
கோபாலன் மருகா கோடி சரண்
குணமாகவந்து கணமேனுநின்று
மணபாதந்தாவென் றுணர்பாலன்மேலே
கோபமு மாமா ஏழை
பாவம்வீண் போமா (3)

காவனக் காட்டி லுட் கார்ந்தும் பல
காய்கனி தின்று தேர்ந்தும் நெஞ்சங்
காமனையுங்கரு வேமனையுச் கொன்றுன்
தாமரை பூசிக்கக் காமர்வீசிவரக்
கடவுளே தொலையா இன்னம்
சடைவு தீரலையா (4)

வாவிமலர்ந்திடும் பூவே தூவி
வணங்கியோ மருட் கோவே யென
வழுத்தச் சாக்கிர சுழுத்திச் சேத்திரத்
தழைத்துக் காத்தரு ட்டழைத்துச்சாத்திர
மருமங்கண் டுரைப்பாய் வெகு
தருமங்கொண்டிருப்பாய் (5)

பாடுங்கணபதி நீடும் சுகம்
படைக்கக் கடைக்க ணுடும் வள்ளி
பாகனே சிவயோகனேமிகு
வாகனேமதி யூகனே எனைப்
பாருஞ் சண்முகனே அம்மை
பார்பதி மகனே (6)

## தலைவன்வரவை தலைவி பாங்கியிடமாலோசித்தல்.

நேமமாய்ப்பணியண்ணுமலை - என்றமெட்டு.

துப்புவள்ளத்திலேழுத் துப்பதித்ததைப்போலப் பல்லியே
சுளைபிழிந்த சொல்லியே வருந்
துதிக்கையாணுவாரீ துதிக்கையா னென்காதோ பல்லியே (1)

சுத்தநிலவில் வில்வேள் வைத்த புருவத்தியே விற்பனம்
புரிகனப் பற்பநம் வாலை
தோன்றல் வருவாரெனத் தோன்றிடாதோ வொரு சொர்ப்பனம் (2)

செப்புஞ் சிறப்பெனவே செப்புந்தனப் பிடியேதோதிடம்
கந்தன்வந்து மாதிடம் தந்து
சேர்த்துக்கொள்ளவருமோ பார்த்துச்சொல்லடிவேறு சோதிடம் ()

தெள்ளுமணியைக் காலாற் றள்ளுஞ் சீரகப்பூஞ் சிங்காரியே
வேலனென்னைக் கோரியே காக்கச்
சேணத்தில் வருவாரென வுணர்த்திடாதோவச ரீரியே (4)

அப்புபூத்தமலர்க் கொப்பு சேர்த்தபதத் தாதியே
அழகுடணிவ்வீதியே இன்றைக்
காறுமுகன்வரவை நேர்வந்துரையாளோவோர் தூதியே (5)

அத்த வீட்டிலலர் மெத்தை மேனடக்கு மெகினமே
அனங்கனங்கந்தகனமே செய்த
அருள்மான்தரு குமாரப் பெருமான் வருவரோ பார்சகுனமே (6)

இப்ரபஞ்சத்தினிலே சப்ரமஞ்சத்தினிலே மாக்கையே
எனநகைத்துச் சாக்கையே பூசி
இருப்பார் சுப்ரமண்யருன் விருப்பாயென்றுரைக்காதோ வாக்கையே

ஏகமானதமாய் பூஜைதா னிதமாங் காலையே
நிதங்காலைமாலையே தொழும்
எனைமகிழ்ந்துகந்த னெழுதவானோவொரு வோலையே (8)

அப்பமுப்பழம்பாகொ டிக்கப்பளமிளநீர் தோசையே
பூசைகொள்வே டேசையே கண்ட
அந்தநாளிலிருந் தடங்குதில்லையெனக் காசையே (9)

அன்பன் கணபதியின் முன்புநின்றருள்கதிர் காமனே
அலர்மேவும் பூமனே அஞ்ச
அன்றோதிறையென்று சொன்னலோடிவிடுவா னேமனே (10)

## தலைவனை நினைத்த தலைவி வருந்துதல்.

வேறு

சேடியென் னேடியிந் துதிக்குதே
தீப்போலக் கொதிக்குகே தென்றல்
சிங்கம்போலச் சீறிக் குதிக்குதே
காமப்பித்தங் கதிக்குதே (1)

தீச்சமுத்ரமோசை கொடுக்குதே
திரேகத்தை நடுக்குதே அன்றிற்
செய்கைபாழ் மனத்தை ஒடுக்குதே
வெட்கம் வந்து தடுக்குதே (2)

தோடிபாடி வண்டு கூடுதே
துணைமயி லாடுதே குயில்
தூரியாடிப் பேடைத் தேடுதே
குழற்றெருங்கல் வாடுதே (3)

தூலமில்லா வூழி முழுகுதே
மனங்கூந்தல் வழுகுதே கோலத்
துகிலவிழ்ந்து கீழே விழுகுதே
கண்ணீர்வந் தொழுகுதே (4)

சோடியான தன விம்முதே
ரவிக்கையிற் செம்முதே தீய
சோனைவான மெங்குங் கம்முதே
யுளம்பாம் பாய் பம்முதே (5)

சொல்லொணாத காமம் வளருதே
வளையலுங் கழறுதே கள்ளுக்
குடித்தாப்போல வாயுங் குளறுதே
கொடியிடை தளருதே (6)

வாடைமோதி மேலை வசக்குதே
மணிமார்பைக் கசக்குதே சப்ர
மஞ்சப்பஞ்சு மெத்தை பொசுக்குதே
பால்பழங் கசக்குதே (7)

மானிரண்டுஞ் சேர்ந்து முவக்குதே
குழன்மாலை தவக்குதே மிக்க
மதுரமாங்கற் கண்டுந் துவர்க்குதே
விழிகாந்திச் சிவக்குதே (8)

ஓடிவந்தருள்வா யூக்கமே
மிகுந்தேவ ராக்கமே மார
னுபத்திரவத்தினால் தூக்கமே
வாராதுற்றே னேக்கமே 9)

ஓதுங் கணபதியு மேற்றவே
கதிர்காமம் போற்றவே வாழு
முமையாள் மகனே வாருந் தோற்றவே
மதவம்மை மாற்றவே (10)

## வேறு தோத்திரம்

ஆனனமாறு விநோதனே போதன பாதனே ஆதி
யந்தமா வரப்ரசாதனே சாதிய பேதனே வண்டர்க்
கரிதாகிய பரிபூரண கிருபாரவிதரு சூரிய
நாதனே நற்சுவேதனே வேதவ நீதனே (1)

ஆரணங்கடந்த மூலனே நூபுரக் காலனே செப்பு
மாலவாய் மீனாட்சி பாலனே சர்வானு கூலனே முன்னே
அடுசூருடல் பொடியேபட இடிபோலதிர் கொடுதாவிய
வேலனே வள்ளி லோலனே யோகிக பாலனே (2

கானகாரநீப வாசனே ஞான ப்ரகாசனே அன்பன்
கணபதிக்கருளுமீசனே மோனவி லாசனே முத்திக்
கடலேபெரு குடலோடிசை யடியாருள மிடிதீர்கதி
ரேசனே வும்பர் நேசனே வெம்பாச நாசனே (3)

காருண்யாகமானு பாவனே பாவலர் நாவனே தெய்வக்
காமர்விசுமுந்திப் பூவனே சாயுச்ய தீவனே வேதக்
கலைமாதுட னலைமாதிரு நிலமாதிக மலைமாதியன்
மூவனே சேருஞ் ஜீவனே தொழுமெங்க டேவனே (4)

## பழனிமலைக்குமரா மயில்வீரா-என்றமெட்டு.

கழுகுமலைக்கதிபா கதிர்காமா
கடவுளென வருமு னைகநாமா
கலபமயின்மிசை யுலகினை வலமிடு
கலியுகவரதக லாரதாமா
கற்பனைவி கற்பமறு
கற்பகமே கற்பிபுனங்
கருதிருதேசுறு சரணு
தாதிருநீறணிகிரணு (கழு) (1)

அழகுநிறைத்தொளி ராதிமூலா
அபலியப்பிகையளி ராலிபாலா
அரகரசிவசர வணபவ குகவெனு
மடியவர் மிடிகெடுத் தாடும் வேலா
அத்திலரா யுத்தமிடு
மத்தனைசூ ரத்தளமு
மமரஉடற் றமர்படைநைத்
தாருளத் தமர்குமரக் (கழு) (3)

களபமணத்திடு கார்த்திகேயா
கருணையருணகிரி மூர்த்திநேயா
கனிதருதருவின நனிவளர் சிகிவரைக்
கணபதி கவிமலர் சூடுஞ்சேயா
கற்றவரும் நற்றவரும்
சீற்றவரான் நெற்றிவரும்
கலைபலநூல் சொற்றவனே
கனிவிலெனைப் பெற்றவனே (கழு) (3)

## ஆனந்தக்களிப்பு.

ஆதியாம்பரங்கிரியின் முருகா-அண்ட
ரருச்சனைசெய் திருச்செந்தூராளுமொரு முருகா
நீதிநிறை பழனிமலைமுருகா-அன்பு
நீடு பழமுதிர்சோலை யாண்டுவரு முருகா
சோதிகொள் சுவாமிமலைமுருகா-மனத்
துருகு பவருருகுவரு குருமலையின் முருகா
வேதமுதி வெள்ளிமலை முருகா-அருண்
மிகுத்துதவு திருத்தணியிலு தித்துதவு முருகா
குன்றுக்குடிக்குகந்த முருகா-கத்துங்
கோடுறுந் திருமலையி லாடுமயில்முருகா
நன்றான சின்னிமலைமுருகா—முத்தர்
நண்ணுபவவிண்ணளவு வெண்ணைமலை முருகா
தன்றுத கழுகுமலை முருகா—ஞானக்
கதிர்வீசுசிவகிரியிற் காத்தருளு முருகா
மன்றான வள்ளிமலைமுருகா-தெய்வ
மணங்கமழு மிமையமலை வந்ததிருமுருகா

பேசுவட காசிவளர் முருகா மிக்க
பெருமைபெறு மருணைசலத்தில் வளர்முருகா
நேசமுள்ள ஸ்ரீசைல முருகா திரு
நீங்காத குமரகோட்டத்தி லுறைமுருகா
வாசமிகு பொதியை மலைமுருகா சித்தர்
மருவிவரு குற்ருலத் தருவிவள முருகா
பாசமறு பாவநாச முருகா வேத
பதந்தருகு சிதம்பரத்து வர்மூமிறை முருகா
தங்குதிருச் செங்காட்டு முருகா அன்ன
தானமக ஞானமலை மேனிலைகொள் முருகா
தங்கத் திருப்பேருர் முருகா மந்தி
தாவுவன வாவுடையார் கோவிலுறை முருகா
பொங்குகரி வலவனூர் முருகா வினை
போகவளி மாகாள யோகபத முருகா
மங்கா வராவிமலை முருகா நல்ல
வரமருள் சிராமலையில் வாழ்வேந்த முருகா
திருக்குரங் காடுதுறை முருகா என்றுஞ்
சீராரும் வீரட்டானத்தி லுறை முருகா
பெருக்குங் காளத்திரியின் முருகா தீர்க்க
பிரபுவே திருப்பூவணத்தி லுறை முருகா
உருக்கமுள்ள நெட்டேரின் முருகா முப்பா
ரோதிடும் பனையூரின் குருநாத முருகா
தெருட்குலவுஞ் சிரிங்கேரி முருகா என்னைச்
சிறுவயதி லடிமைகொண்ட கதிர்காம முருகா
சாதிமத பேதமற்ற முருகா தொண்டர்
தலைகாக்கு மலைகுபக மோங்கார முருகா
மாதுதேவானை புணர் முருகா வள்ளி
மானைப் புகழ்ந்தணையு மகிமைமிகு முருகா
மாதிரந் தொறுமுறையு முருகா அன்னை
மதுரை மீனுட்சி சுந்தரார் தனைய முருகா
வேதமுடிமேல் விளங்கும் முருகா இந்த
வேளையிலுன் தாளையளித் தேழையையாள் முருகா

அசுரர் குடியைக்கெடுத்த முருகா வாழ்த்து
மமரர் சிறைமீட்ட சரவணபவனே முருகா
சசிபுகழுந் தருமதுரை முருகா வச்ர
தண்டனுந் தண்டமிடு தண்டையடி முருகா
வசியவெனு மந்த்ரமுறை முருகா பொல்லா
வல்வினைநோய் பில்லியமை சல்லியந்தீர் முருகா
பசுபதியாய் நிற்குமிள முருகா எந்தன்
பாவமற ஓடிவந்தோர் பாதைசொல்லு முருகா
சச்சிதானந்த சிவமுருகா நித்த
சாயுச்ய மோட்சசாம்ப் ராச்சியனேமுருகா
மூச்சுடராய் விளையாடும் முருகா வாளுள்
முழுதுநினை பழுதிலார்க் கெளிதில் வருமுருகா
கெச்சை புனைகார்த்திகேய முருகா சுடர்ச்
சேவலங் கொடியுடைய பாவலனே முருகா
இச்சமயம் மிக்குதவு முருகா பத்த
ரெடுத்த காவடிசேர வடுத்து வரு முருகா
குங்குமங் கலவையணி முருகா நீபக்
கொலைபூண்ட கலையாண்ட மலையாண்டி முருகா
[illegible]ங்காரக் கிளையருக முருகா எங்கும்
அறிவாகி விரிவாகிச் செறிவான முருகா
மங்களா காரவள முருகா எந்தன்
மனத்திலே நினைத்த போதினித்தூறு முருகா
கொங்காருங் குன்றை நகர்வாசன் அன்பின்
குணமதிக கணபதிமுன் கணமதில்வா முருகா
தெந்தினனா தினதினனா தினனா

## நகர்வளம்.

### திருவுற்றிலகு-மெட்டு முன்மூடுகு

பத்தருஞ் சிவமுத்தருஞ்சுர ரத்தருந்தவ சித்தருந்துதி
பாதநீத விநோத சண்முகநாதனே அன்பர்
பாதகந்தவிர் போதகந்தரும் நீதனே நிற்கும்
பருவதங்களி லருமைதங்கிய
பெருமைபொங்கிய திருவயங்கிய

பார்புகழ் குன்றக்குடியை வேதனே மெச்சிப்
பார்க்கிலச்சி றென்னவென்பேன் தூதனே
பண்ணை மீதல செண்ணிலாமலர் தண்ணுடைடைதநண்ணிமீனினம்
பாய்ந்து பெண்ணோ சேலாடிக் கிடக்குமே வண்டு
பாடியே துயிலவைத்துக் கடக்குமே பின்பு
பாணமோபொறி வாணமோவென
வாணைமோதியே சோணைபோல்வரு
பளபளப்போ மின்னலையு மடக்குமே சங்கு
பருமழை யென்று றுமியார்ப்பத் தொடக்குமே
நித்தமத்த மலைத்தலத்தை வலத்துமெத்திரதத்தரிப்பரி
நேயமாயா யாசமோயக் காவுமே ஓங்கி
நீணில மெங்குங் குடைபோற் பாவுமே கொப்பால்
நிலவுசுக்கையு மிலகமக்கற
உலவிமிக்களி குலவநற்கமழ்
நீங்கிடாத தேங்கவிபூம் பூவுமே கையால்
நின்றுவணங்கிக் குனிந்து தூவுமே.
நெட்டலர்க்கொடி மட்டுகுத்திக மட்ட திக்கினு மெட்டிவிற்பல
நிறமலரைக் காட்டுமலர்த் தோட்டமே காண
நித்தலுந் தேவமினூர்க்குத் தேட்டமே கொள்ள
நினைவதற்கினி தெனுமனத்தின
நனிவனத்தவ முனிவரொத்தமர்
நேர்மைகண்டு பாடுங்குயிற் கூட்டமே அங்கே
நீடுமே கொண்டாட்டமயி லாட்டமே
சுத்தசுத்தியை யொத்திவைத்த களத்தர்முற்படு முத்தினத்திணைத்
தூக்கியெறிந்தே விளங்கும் வீதியே நிற்பர்
தோகையன்னூர் மாலைமயிர் கோதியே பாவுஞ்
சுடர்விடுத்திடு நவமணித்த
டகமகத்துவ சிறுவர்நற்பரி
தூண்டி விளையாடிவருஞ் சோதியே பார்க்கச்
சூரியனைப் போலிருக்குந் தாதியே.
சொட்டையற்றகல் வட்டை யொத்துயர் சொர்க்கபொற்கர சொற்
[பவுக்கையர்
சுந்தரங் கண்டிந்திராணி நேத்திரம் போலச்
சொந்தமாய் நினைந்து வெகு தோத்திரம் செய்யச்

சூரருமிச்சைகொள் சரசவுச்சித
முருவல்பெற்றதி பிரசவர்க்கமுன்
தோயவருஞ் சாயலுக்கு மாத்திரம் ஒப்பு
சொல்லு மொவ்வாதூழி காலஞ் சூத்திரம்

சத்தசத்த சமுத்திரத்தினை வைத்தபொற்கிரி யைப்படிக்கிடு
சாமிவாழுஞ் சேத்திரத்தின் தலையிலே மிக்க
தங்கமயமாய் விளங்கும் மலையிலே நின்று
தரையுணர்ந்திடி லரசரிந்திரர்
சிகரிதங்கிய கிரணபிங்கல
சந்தகும்பமே துலங்குந் துலையிலே கந்தன்
சந்நிதிமன்னும் பிரம நிலையிலே

சர்க்கரைக்கு மினிக்குமிக்கன செப்புசெப்பென சேர்ப்பசித்திரஞ்
சாருந் தெய்வயானை வள்ளி கூடியே நிற்கத்
தன்னைமறந்தோர்கள் சூழ நாடியே என்றுந்
தழலெனத்திகழ் பழவயிற்கொடு
மழகுடைக்கழல் கணபதிக்கருள்
சரவணோற்பவன் பெருமை பாடியே சற்று
சாற்றவென்றால் நாவு வேணுங் கோடியே.

## பாங்கிதலைவி நிலைமைகூறித் தலைவனையழைத்தல்.

என்னடி நான்பெற்ற—என்றமெட்டு திரிபு.

கொங்குமிழுங் கடம் பாரா மணக்
குங்குமபத்ர பதாரா சத்திக்
கொருசுதனென வருகுருபர சரவணபவ வறுமுவனே
குன்றுதோறுமெங்கு போரா ஒற்றைக்
கொம்புவாசோதர தீரா. (1)

கும்பமுனிபணி வோனே சூரக்
கும்பலைமுன் சிதைத் தோனே மாழைக்
கொடிநிகரிரு மடவியரொடு தடமயின்மிசை நடமிடுசூரர்
கோவேழுவரின் கோனே ஒன்றைக்
கோரினனிங்கு வந் தேனே. (2)

கங்கு கரையறுந் திருவே யன்பன்
கணபதிக் கருள் குருவே எங்குங்

கருணாகர னெனவேதுதி சரணாசிவ கிருணாலய
கவனியும் பொன்னன வுருவே தங்குங்
கன்னியவள் கரந் தருவே. (4)

கண்ணிரண்டுஞ் செய்ய சேலே வள்ளைக்
காதுரை பசுவின் பாலே பாதங்
கமலாரமி னிடைநூலக டிலைநாசியெண் மலர்தோள்வளை
கச்சுதனமலை போலே அவட்
காசையெல்லா முந்தன் மேலே (5)

திங்கள்முகம் வாழைத் தண்டு துடை
சீழுநமாங்குழல் விண்டு வணங்
திகழ்நாகன களமாசுக ரதவேள்சிலை புருவோவமை
செம்மணியே நகங் கண்டு ரம்பை
சேவிக்குஞ் சுந்தரப் பெண்டு. (5)

சீவிமுடித்தலர் கோடி விலைச்
சித்ர விழுங்கையைச் சூடி முத்தத்
தினுசேசெறி கனபூஷண மிணைமாதன மதிலேவிழச்
சிங்காரித்துன்னையே நாடி நண்ணுந்
தேவிக்கு நானொரு சேடி. (6)

பாலுங்கசக்குதென் கின்றாள் மெத்தைப்
பஞ்சமுத்துகின்ற தென்றாள் ஒரு
பகலாகிலு மிரவாகிலு மகமீதுனை மறவாதொரு
பதுமைபோன் மௌனியாய் நின்றாள் நேசப்
பாங்கிகள் சூழ்ந்திடும் நன்றாள். (7)

இரணரவிக்கை கிழிந்து வீணா
யெததனையோ போங் கழிந்து அவ
ளிணைமாதன மிழைநேரிடை வளைவாகிட வெழுபோதிவ
ணேவர் தாங்குவ ரெழுந்து வந்து
இன்புறு மன்பு பொழிந்து. (8)

கொங்கையரே மிக்க மோகம் வைத்துக்
கூப்பிட்ட பேர்கள்சை யோகம் செய்யக்
குணமாய்வர விலையேலதி பவமாமென விதியேயுள
குற்றமில்லை நீ சிநேகம் வைத்துக்
கொண்டின்றளே செய் விவாகம் (9)

பெண்ணுக்குப் பேயு மிரங்கும் என்று
பேசிக் கொள்வாரூர்க ளெங்கும் அன்பைப்
பிரியாமடவியரோடொரு கணமாகினு மதனுகம
பிரியலீலை செய்யத் தங்கும் சுகம்
பேரலைபோலவே பொங்கும். (10)

சந்தனங் கத்தூரிச் சாந்தும் காமச்
சஞ்சலத்தாற்றீ போறக் காந்தும் தங்கச்
சரமாலிகை யலர்மாலைக ளனலேறிய சருகாகவே
தாங்கொணு தூமையைப் போந்தும் உள்ளந்
தயங்கினள் சேருமன் பீந்தும். (11)

கந்தமலர் சொரி தாரும் வைரக்
கங்கணமும் பூணுஞ் சீரும் பெற்ற
கனமாதர சிலைபணச் சிலவோ யணைவாய்தினங்
கரும்புதின்னக் கூலி யாரும் யார்க்குங்
கையிற்கொ டுப்பரோ பாரும்

அங்கசன் போரிடுக் துக்கம் கொண்டு
ஆரணங்கஞ்சன வக்கம் துஞ்சா
தவனேதலை யறவேவிட அவணீதனி வரவேநினை
அன்புடன் வாருமென் பக்கம் சிங்கம்
மாண்பிள்ளைக் கென்னையா வெட்கம். (14)

பால்பழஞ் சாதங்கற் கண்டு தயிர்
பாயசமு மங்கே யுண்டு மணப்
பன்னீர்புனு கின்னுனமு மன்னேவுள வென்னேரமும்
படுக்கமெத்தைசாயத் திண்டு முண்டு
பற்பல வாசப்பூச் செண்டு.

## தலைவியிரங்கல்.

குன்றக்குடியில் வாழுங்குமர வேளே வீரற்
குரூபசூரரை நூறுஞ்சமர வேளே திருக்
குணர்நற்சற்குண மணவிற்பொற்பண
மணிமற்கற்புய கனகற்பக்குரு
கும்பமுனி மனத்திலமரும் வேளே வும்பர்
கூடிச் சிகாமுடிக்குஞ்சரண வேளே (1)

கூறுங் கணபதிநெஞ் சுறவானவா ஒரு
குற்றமில்லார் பழகுந் துறவானவா மருக்
குலவப்பப்பல ருலவப்பொற்சர
மிலகொப்பிற்பத மொலிசெப்பப்படர்
கோமளத்தோகைமயிலுறை வானவா உம்மைக்
கும்பிட்டேன் வாருந்திருமுறை வானவா (3)

தென்றலெனுங்கொடியவொரு சிங்கமே வந்து
சீறுவதால் மெலிந்தேன்மிரு தங்கமே இந்தச்
சிரமத்தினை விடு கிரமத்தினிதுற
வரமத்திகையணி சரவிற்கரவரி
திக்குமுகனறியாச்சிவ சங்கமே தோன்றுந்
தேவாதி தேவனேவேற்கரத் தங்கமே (3)

சேணில் நிலாவெரிக்குந்தீக் கஞ்சியே நெஞ்சிற்
சீயென்றருவருத்தேன்பாற் கஞ்சியே மஞ்சஞ்
சிகைகட்டிய தொடை வகைகட்டியவட
நகைகட்டியவுடை புகைகட்டியதனத்
தீய்ந்துணைசையாலேசேன் வஞ்சியே சொல்லும்
சேவகனே வந்தணைவாய் கொஞ்சியே (4)

கன்றலிலாமதன்பெய் கடம்பினாலே வாடுங்
காமக்கலக்கமற விடம்பினாலே நின்று
கனிவுற்றெனதொரு பெயர் சொற்றமையவ
ணினிதுற்றிருவரு மணைபெற்றணிசை
காதலுடனலர்ந்த கடம்பினாலே போற்றிக்
கட்டியணைத்திடலா முடம்பினாலே (5)

கச்சைவருத்தெழுந்து துலங்கினதே தனம்
காலனை நான்மருங்கு லலங்கினதே முத்துக்
களையப்பழிபுய வளைதொப்பெனவிழ
விளக்கிக்களபமு மழியக்குழைவது
கண்டிலையோமன்மதன் விலங்கினதே திரக்
காட்சிகொடுப்பாயணை யிலங்கினதே (6)

## தலைவி வருந்தல்

காருண்ய ஞானவடி வேலனே யன்பன்
கணபதிக்கெல்லா மனுகூலனே முத்திக்

கடலையடியவர் மிடிதீவினைகெட
வடவேறிள மயிலுடனே வருபவ
கானகதிர் காமசு சீலனே கந்தா
கர்த்தவியனே கௌரி பாலனே (1)

காமவிகாரமான மோகமே கொண்டு
கட்டிப்புரளுமனு போகமே இன்னுங்
கடுகாயினுமற விலையாவெனதுடல்
மலையாவினியொரு தினமே மருவலாம்
கையைவிடுபோதுஞ்சை யோகமே பகல்
கணடுகரையுதுபார் காசமே (2)

சேருஞ் சிங்காரதன பார்த்தே வுந்தன்
செய்யநகத்திரேகை தூரத்தே வானிற்
றிகழோரிளமதி நிகர்பிரியகுறி
மிகவேதெரிவதெவ் வகையான்மறைபடும்
செப்பொணுவேலை செய்தீர் தீரத்தே நானும்
சேர்க்கைவேண்டிடேனிந்த வாரத்தே (3)

தேனமர்ந்தே மணக்கும் பிச்சியே சூடிச்
சேரவந்தகாம வெருச்சியே கொண்டாய்
செழுவாயிதழென வெளையாயுளதென
விளைகேளிகளுமே கலியாணமுமினம்
செய்திலே னீதறிந்தாற் கச்சியே கொண்டு
சிரித்துக் காரித்துப்பாரோ வெச்சிலே (4)

மாரன்மதிமயங்குங் காமமே மீறி
வலியவந்த பெண்ணுக்குச் சேமமே தந்து
மறைவாயொருவரு மறியாரகசிய
வுறவாய் மருவியே பிரியாதுருகிறாய்
மரியாதையாசகஸ்த்ர நாமமே பெற்ற
மன்னனேயாச்சு நாலாஞ் சாமமே (5)

வாய்வைத்ததிகழுருஞ்சிக் காலையே இரு
வன்றுடைக்கொண்டு மிடைச் சீலையே சோர
மதிலோடிறுகிட வெறியோடிருதன
மதுநோவுறவளை குழல் பூசிதறிடத்

தோய்ந்ததின்னம்போதாதோ மேலையே விடு
சுப்ரமண்யாவிதோவுன் வேலையே (6)

கொண்டைகுலைந்துமலர் சிந்துதே சோடிக்
கொங்கைவீங்கி நொந்து சிவந்துதே அங்கங்
குழைவாய் வியர்வுடனழைவாய்களைகளு
மழிவாய்ப்புளுகிடு களபாதிகடுயிற்
கோலமுஞ் சாலவிந்தா னந்துதே பாரும்
கோழிகூவிச் சூரியன் வந்துதே (7)

வீட்டிற்கேகி றேனென்று வாயாலே வந்தால்
விரைந்து கையைப்பிடித்துந் தோயலே என்ன
வெறிதானெனை விடுசரியீ தலையென
துரியோ ரறிகிலோ வரிவாட்கிரைசெய்வர்
வெட்கமிலாவுனக்கேன் கோயிலே பாரும்
வீசுதலர்ச்சயன பாயலே (8)

நேசமங்கையர் கூடி வேசியே எங்கே
நேற்றிருந்தா யென்பார்க ளேசியே பின்னால்
நெடுவாதிடையொரு வடமேகொடுபட
நினைவாகிடு மதிபடவோவிடுவது
நீலக்கருகன்மணிப் பாசியே பூண்டேன்
சூலடைந்தாலென்செய்வேன் யோசியே (8)

இன்னும் வெறுக்கலையா விச்சையே வுனக்
கில்லையோ கொஞ்சமேனும் லெச்சையே பச்சை
யிறகேவிரிதிருவுறைகேகயவெரி
னருளாய் வளர்பவசரணே சரணினி
யீகைவைத்தே மணித்தூண் மச்சையே சேர
வேரிட்டுப்பார்த்துவந்தி ரட்சியே (10)

உ

ஓம் கணேசாயநம:

## காப்பு.

### ஸ்ரீவேளுதர்துதி

வெண்பா.

சீராரும் வைகைத் திருமதுரைச் சொக்கலிங்கம்
பேரார மண்சுமந்த பிட்டுத்தோய்—பாராசின்
பாலமருஞ் சித்தி விநாயகரைப் பாடுதற்கு
நீலமயிலேறி யென்முன் நிற்க.

### ஸ்ரீ சோமசுந்தரர் துதி.

கலிவிருத்தம்.

நாம னந்தபவந்தனி னண்ணினும்
பாம னந்தரி யாதிடர் பண்ணினும்
பூம னந்தரும் புண்ணியன் கண்ணியன்
சோம சுந்தரச் சொக்கரை யெண்ணுவாம்.

### ஸ்ரீ மீனாம்பிகை துதி.

கலிவிருத்தம்.

தான லாதன தானெனத் தானினைத்
தீனனாயி னிழிவுற நீர்த்தருண்
ஞான லாப மளித்திடு மாலவாய்
மீன லோசனி மெல்லிய பாதமே

### ஸ்ரீ சரஸ்வதிதுதி.

தாபத்திரயமதிற் றட்டுண்டிரு துணர்வீந்
தாபத்திற் காத்திடுநா லாரணங்கே—சேவித்தேன்
குங்குமஞ் சந்தங்கதம்பங் கொந்தினந்தங்குஞ் செழுஞ்செம்
பங்கயம் பங்கம்படும் பைந்தாள்

### ஸ்ரீகுருஸ்துதி

தன்னை மறந்து தலைகீழாய் நின்றவெனக்
கென்னை யளித்தானை யெண்ணுவனே—மன்னுமணப்
புட்பமிட்டர்ச்சித்துரைத்துப் புத்திவைத்திச்சிப்பைவிட்டுக்
கட்டுநிட்டை கட்கதித்துக் காண்.

### அவையடக்கம்

குறள் வெண்பா

புத்தளையுண் பானோர் புலவரென்புன்பாவேற்பர்
பித்தளையுந் தங்கமாம் பின்.

## ஆசிரிய விருத்தம்.

உச்சிநடு வொளிர்சுத்த முச்சுடரி னிலைபெற்ற
    வுத்தமர்க் குதி ரத்னமே
ஒப்பிலருள் கொடுபத்தர் செப்புகவி மலர்னைத்த
    வுத்தரிய மணிகத் தனே
பச்சைமா கதவச்ர முத்தரவ மணிமொய்த்த
    பற்பல சரவு ரத்தனே
பத்திவள ருளமெத்தை யுற்றுவளர் பரமுத்த
    பற்பகரி முக வித்தகா
இச்சையறு பவர்பட்ச மிச்சையற விழியச்ச
    வெட்டபோ றிமோதக வத்தனே
இப்பொழுதென் வினைவெற்பை வெட்டிமவு னசின்முத்ரை
    யெற்குள் ளாநினை யப்பனே
செச்சைகமழ் மதுரைத்துரைச் சியுமைய வள்மெச்சு
    சிற்சபையர் ஜெகராட் சகர்
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
    சத்தி விநாயக நித்தனே. (1)

சுற்றுமன மசைவற்று நிற்கவுனடி துதித்த
    சுத்தநினைவற விட்டிகம்
சுத்திரசித மெனப்ரமத்தின னுபவவித்தை
    சொற்றபல கலை கற்றுளப்
பற்றகல் சகநிட்டை பெற்றுமறு தலமுட்டு
    பற்றியெரி தரு சத்தியை
பக்குவமுட னெழுப்பி நெற்றிபா விடம்வைத்து
    வெட்டவெளி தரி சித்துமே
சிற்பிரபை யுடனை க்யத்தவமமை வுறுசித்தி
    சிற்றறி வனுற லெத்தினம்
செப்புமறு சமயத்தர் சித்த சரவணமுத்து
    செட்டி தமைய னலத்வைதா
தெற்குநா பதிபெற்ற பொற்கமல தடசித்ர
    சிற்றிடை மீனவ ணட்புடை
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
    சித்திவி நாயக நித்தனே. (2)

சட்டரச வமுதத்தை யுட்கொளினும் வாருக்கூழ்
    சத்தி லிலைகள் புசிக்கினும்
தக்கபசி தணிவிக்கு மிக்கணவை சுலபத்தில்
    சிக்கு மதுவதை யிச்சியா
இட்டபடி யெனவுய்த்து மட்டதிசை தளிவெற்பு
    செற்றவன மிடை சுற்றியே
செக்கர்நிகர் சடையர்க்கு மக்களென வருபத்தர்
    சிற்றடியில் முடிவைத் தவாள்
தெட்டுகதி மிசைபுத்தி வைத்துமன விரதத்தே
    சொக்கியன வாதத் திலும்
திக்கினம சிவயத்தை யுட்குளுயர் வுறவுச்ச
    ரித்து மாகா சிற்பரா
திட்டிலுன தருள்சற்று வுற்றருள்க வெனவிற்கொள்
    செப்பிலுரை பொடியைத் தாாய்
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநகர் பொழின்மெத்து
    சித்திவி நாயக நித்தனே. (3)

தத்தைமயில் குயினத்து சித்ரமட வியர்முத்தை
    யொத்த நகைதனி லுக்கியே
சத்தவலை யெறிசத்த வத்திநிகர் துயர்பட்ட
    சட்டுவினை பிணிபற்றியே
பித்தனென வுலகத்தார் கெக்கெலென முனைக்க
    பிச்சையிடு மனை சுற்றியே
பிய்த்தவுடை யிழைதைத் துடுத்துமொரு தடிநட்டு
    மெய்த் திருமல் சளிகொட்டவே
மெத்தவுடல் பதரத்த வித்தசிறு நடையிட்டு
    விக்கிவிழு தருணத்திலே
வெற்றனென வவணுற்றார் ஈக்குதிரி பலைதட்டி
    வெப்பி னனைய விருத்திட
செத்திடுத லொளியப்ர சித்திபெறு பிரமைக்ய
    திட்ப மருள பயத்தனே
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநகர் பொழின்மெத்து
    சித்திவிநாயக நித்தனே (4)

கர்த்தவிய தொழின்முக்க ணத்தன ரவணைபெற்ற
    கத்தனைய னமரார்க் கெலாம்
கற்பகம தெனவிற் கொள்வச்ரபடை யவர்சித்தர்
    கற்குகை யிலமர் முத்தர்மா
சர்ச்சனர் கணிதமொய்த்து மர்சனைசெய் புவுசுற்ற
    சக்திமிகு சமயத் தவா
தற்சமய கிருபைக்ரணைச் சரண மதைநத்து
    தற்கினிய வழிசொற்றவா

நர்த்தன விமலவிக்ர மக்குமரி தருபுத்ர
நட்பினருள் விளை முத்தமே
நச்சுவினை யெறிதுக்க விற்கடலி னிடைபட்டு
ணட்டமுடனுழ லெற்குநேர்
சித்தமகிழ் வொடுநிற்ப ரெத்தின மதருள்சுத்த
சிற்சொரூ பசுர விற்பனு
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
சித்திவிநாய நித்தனே. (5)

இக்கனலரு டுபட்டு முட்டுளை கொடினலற்ற
வுற்சையனா வுடல் கெட்டுமே
எய்த்திழிய மனிதர்க்கு நற்கவிதை பலசெப்பி
யிப்படியு மலையத் தகா
சிக்கலறு சமயத்தி லுய்த்துணர்வை யுணர்புத்தி
செப்புதுமெ னுறை சற்றுகேள்
சித்தமுலை வறநித்தல் பத்தவென வருள்கைக்கு
வெப்பொழுதில் மனம் வைப்பயோ
நக்கலொடு துடைதட்டி விற்கதை கொடமரிட்ட
நச்சரவ நிகர் துர்க்குணர்
நட்பிலசுரவரக்கர் பட்டழிய வயிரொட்ட
நற்குமரர் துணை யுற்றவா
திக்குமகிழ் ஜெயமிட்ட பத்ரபத சிலைபெற்ற
செப்பமொடு வளர் கொற்றவா
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
சித்திவி நாயக நித்தனே. (6)

முப்புரமு மெரிபற்ற நெற்றியன னயனத்தர்
முத்தமிடு மிகு முத்தமி
முத்தமணிதன வெற்புருட்டு மெழுகதிலுக்ர
முற்றுவரு மொரு புத்ரனே
ஒப்பிலுயர் திணைமுத்து திர்த்தபல கிளிபத்தொ
ருத்திமனன் வழி பட்டவா
ஒற்றுமைகொடி சைசித்திபுத்தி தனகனமொக்கு
ளொத்துவரை தரு மற்புயா
எப்பொழுது முணிகழ்த் துணர்ச்சியுள குகைபுக்கு
மிட்டலிநெய் வடை யத்தனே
எட்டுமலை புடைபட்ட வப்புததியுடை யிட்ட
இப்புவியின் முதன்மைப் பிரான்
செப்பிலிவ ரனுவிக்ர மக்கரியின் முகபுட்ப
சித்ரவிழி கொடு சுற்றுடார்
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெதது
சித்திவி நாயக நித்தனே. (7)

அத்தமனை கிளையெச்ச மித்தனுமொ டெவைநித்ய
மச்சமறு சத மற்றியா
தைக்யகதியெது செற்று நிற்பதெவணி வைகட்கு
மத்தனெவ னென் வுற்றியான்
நத்திநினை வொடுபுத்தகத் தொகுதி பலவற்று
ணத்தமற வுண ரக்கணே
நச்சுசுரர் முனிவர்க்கு மத்தனயன ரியர்க்கு
நக்கீரர்சொல் முருகர்க்குமே
றுத்திதிகழ் வெளையத் தியர்க்குமுத லுளைவைத்து
ஞற்றுவர்கள் பலசித்தெனே
உச்சிதநின் மகிமைக்கு மிக்கநிலை யெனவித்த
மொக்க வணுகுதன் முற்றுமோர்
தித்திலருள் வெளியிற் செழித்த பதமலரைப்பி
டித்தனா னினி விட்டிடேன்
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
சித்திவி நாயக நித்தனே. (8)

வெட்டுநவ மணிகட்டு பட்டிகையி னழகிற்கும்
வெட்சிபுரி தனசுற் குமால்
விட்டதளி ருதரத்திலிட்ட துகிலொடுதத்து
வெற்றிழை யினடு விற்குமார்
மெட்டிபரி புரமுற்ற பொற்கழலி னழகிற்கும்.
விற்புருவ முக புட்பமேல்
வெற்றிவளர் நயனக்க யற்குமயல் கொடுசொக்கி
வெட்கமற விலை செப்புவார்
இட்டமொடு சுழலப்பணித் துளையறுபக்க
மெற்கமைய வருள் சிக்கமீ
தெக்கிநவ நிதமொக்க மொக்குகர னிடையர்க்கை
யெக்யகுரு மணி சுத்தவான்
திட்டெனமு னொருபத்து மற்றலையன் விழைநத்த
நெட்டயரு மகிழ்சிற்பரா
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநுகர் பொழின்மெத்து
சித்திவிநாயக நித்தனே (9)

குத்தியருளுடையத் தவத்தினுயர் வுறமிச்சை
குற்றமற வரு ளிச்சதா
குச்சிலினி லமரப் பிணிக்குலம தொழிசித்தி
கொற்றவ முனுத விற்றைநாள்
மத்தமதி யறுகத்தி புட்பமணி புனல்கொட்டு
மற்கிடையர் ரதவச்சு சேர்
வட்டை முதலொடியப் பொடித்துமன மகிழ்வுற்று
மட்டில் கவினுறு பெட்பினேய்

வித்தையென வுலகச்சு கத்தைவிடு பவர்பக்கல்
        விக்ன மறவளர் கற்பகா
விட்ணுபதி யினுமுக்கியத் தொட்டியவர் வைத்த
        மெத்தவுயா வுறு மற்புதா
சித்தவெளி திகழ்முத்த ளித்தகண பதியுத்தி
        செப்புகவி மலர் பெற்றுவாழ்
சிட்டர்புகழ் சிவசொக்கர் பிட்டுநகர் பொழின்மெத்து
        சித்திவி நாயக நித்தனே. (10)

**சித்திவிநாயகர் பதிகம் முற்றிற்று.**

## நொண்டிச்சிந்து.

சொல்வதைக்கேள் மனமே        சும்மா
        துள்ளித்திரிந்து பாவங் கொள்ளவேண்டாம்
பல்வகை வடிவெடுத்தே        ஆதி
        படைப்பிலிருந்து பிறந்தடைந்ததுன்பம்
மெல்ல நினைந்தாலோ        எந்தன்
        மேனிநடுங்குமே நீயே யறிந்தெரியாய்
செல்வமொரு நிலையா        இந்தத்
        தேசத்தெதும் நமக்கு சாஸ்வதமா (சொல்)

பெற்றார் பிறந்தாரும்        கொண்ட
        பெண்டு மெத்தனையோமுன் கண்டுமிருந்தோம்
உற்றார் புகல்வாய்        எமன்
        உடைவாளுருவிவந்தாற் றடைசெய்வதார்
சற்றுகிலுமறியா        மூடத்
        தன்மையினாலனேக மெண்ணியுழன்றாய்
பற்றாசையை விடுவாய்        இந்த
        பவனமெல்லாம் பொய்யென்று தவநினைவாய் (சொல்)

உடலோ பொம்மலாட்டம்        ஈது
        உறங்கும்போ தெங்கிருக்கு மறந்தனையோ
நெடுநாளிருப்போமென        நம்பி
        நிட்டை நிலைதுறந்துநீ கெட்டலைவது

கொடுமை கொடுமை யந்தோ — உன்னை
கூடியவெனக்கு நீ கேடுநினைத்தால்
கடவுள் விட்டிடுவாரோ — கொஞ்சம்
கருணைவைத்தாலுனக்கு தருமமுண்டும் (சொல்)
மென்மேல் மகிழ்ந்திருப்பாய் — இன்ப
வீடுநீ தேடவேண்டாம் கூடியிருந்தால்
மூன்பாயிலங்காதோ — திரி
மூர்த்தியை வேறெங்குபோய்ப் பார்த்திடவேண்டும்
அன்பாய் ரகசியமே — உனக்
கனவாதஞ் சிறப்பாமெனையடைந்தால்
பின்பேதும் பெரிதில்லையே — என்போற்
பெருமையுனக் கருள்வாரொருவரில்லை (சொல்)

ஆலயமே மூலம் — நம
தறிவே சிவலிங்கமா மறிந்துகொள்வாய்
மாலயன் காணொணாத — சோதி
வடிவாய் விளங்குமோன முடிவானது
லீலையா ஞாலமதை — நாமே
நிரூபித்ததென் றுணர்ந்து மொருமித்திராய்
தாலத்திற் புகழ்நடுவாய் — எங்கள்
சாமிமேலாணை வைத்தேன் சேமமதுவே (சொல்)

தன்னையுந் தனக்கருளும் — ஞானத்
தலைவனையு மறிதல் தலைமையென்பார்
பின்னையறிவதெல்லாம் — பேதைப்
பேயறிவாகுமென ஞாயமுண்டுமே
என்பாலிணங்கி வாராய் — என்று
மிணையிலாக் குன்றைநகர்க் கணபதிசொல்
தென்பணையூர் வாழும் — அண்ணல்
தெச்சிணாமூர்த்தியுமுன் பட்சமிருப்பார் (சொல்)